# காரேஜ் பாதுகாப்புக்கான சரிபார்ப்புப் பட்டியல்

## தீப்பிடிக்கத் துவங்கும் முன்னதாகவே அதை நிறுத்துங்கள் மற்றும் அபாயகரமான கார்பன் மோனாக்ஸைடு (CO) விஷம் பரவுவதை முன்னதாகவே தடுத்திடுங்கள்!

**ப்ராம்ப்ட்டன் நகரில் காரேஜ் தீப்பிடித்தலே பெரும்பாலான தீ விபத்துக்களுக்கு #2 காரணம் ஆகும். கேரேஜ்-இல் செய்யப்படும் பல செயல்பாடுகளும் பாதுகாப்பற்றவை மற்றும் தீப்பிடிக்க காரணமாகிறது அல்லது CO விஷம் காற்றில் பரவ ஏதுவாகிறது.**

**இந்தப் பாதுகாப்புக் குறிப்புக்களை பின்பற்றுங்கள் மற்றும் காரேஜ் கதவுகள் திறந்திருந்தாலுமே கூட பாதுகாப்பற்ற செயல்கள் எவை என தெரிந்துகொள்ளுங்கள்:**

### பொருட்களை பாதுகாப்பாக வைத்தல்/எரிபொருள் நிரப்புவதற்கான குறிப்புக்கள்:

- ✓ அபாயகரமான பொருட்களை தீ, தீப்பொறி, அல்லது ஜுவாலை ஏற்படுத்தக்கூடிய பொருட்களில் இருந்து தூரமாக வையுங்கள். இவற்றை சுவிட்ச் ஆன்/ஆஃப் செய்யும்போது பொறி கிளம்பக்கூடிய மின்மோட்டார்களும் அடங்கும்.
- ✓ எரிபொருளை அதற்கென ஒப்புதல் வழங்கப்பட்ட கொள்கலனில் இறுக்கமாக மூடியிட்டு, பெயர் அட்டையிட்டு சேமியுங்கள். நீங்கள் சேமிக்க அனுமதிக்கப்பட்ட அதிகபட்ச அளவானது **30** லிட்டர்களே ஆகும்.
- ✓ எச்சரிக்கையாக இருங்கள்; சிந்திய எரிபொருளானது தீயைத் தூண்டிவிட்டு கடுமையான காயம் ஏற்படுத்தலாம். சிந்திய அபாயகரமான திரவம் அல்லது எரிபொருளை உடனடியாக துடைத்து தூய்மை செய்யுங்கள்.
- ✓ ஒரு சாதனத்தில் எரிபொருள் நிரப்புகையில், சாதனம் வெப்பம் தணிந்த நிலையில் மட்டுமே நிரப்பவும் (புல்வெட்டும் எந்திரங்கள், பனி அகற்றும் எந்திரங்கள்).




### பாதுகாப்புடன் அகற்றுவதற்கான சிறுகுறிப்புக்கள்:

- ✓ புகைந்துகொண்டிருக்கும் பொருட்களை நேரடியாக குப்பைகளுடன் இடுவதை தவிருங்கள். சிகரெட் நுனி மற்றும் புகையை முதலில் நீரில் நனைத்து பிறகு குப்பைக்கூடையில் இடுங்கள். புகைந்துகொண்டிருக்கும் பொருட்கள் சிகரெட் நுனிகள் போன்றவற்றை அசைக்க முடியாத ஆழமான சாம்பல் கிண்ணத்தில் இட்டு அகற்றுங்கள்.
- ✓ எண்ணெயில், மற்றும் கரைக்கும் திரவத்தில் தோய்த்த கிழிந்த துணிகளை ஒரு உலோக கொள்கலனில் இட்டு இறுக்கமாக மூடி இடுங்கள்.
- ✓ 9 வோல்ட் பேட்டரிகளை அப்புறப்படுத்தும் முன்னதாக அவற்றின் நுனிகளுக்கு டேப் உறையிடவும். பீல் பிராந்தியத்தின் பேட்டரி மறுசுழற்சி செய்யும் திட்டம் பற்றிய தகவல்களுக்கு அவர்களை நாடுங்கள்.
- ✓ இனிமேற்கொண்டு தேவையில்லாத பயன்படுத்தாத தீப்பற்றக்கூடிய எரியக்கூடிய பொருட்களை அவ்வப்போது அகற்றிவிடுங்கள்.




BRAMPTON FIRE EMERGENCY SERVICES


905.458.5580
bramptonfire.com
firelife@brampton.ca

BramptonFire
@BramptonFireES


BRAMPTON

# காரேஜ் பாதுகாப்புக்கான சரிபார்ப்புப் பட்டியல்

**மின்சாரப் பாதுகாப்புக் குறிப்புக்கள்:**



- கூடுதலான ஒயர் அமைத்தல், பிளக் செருகும் இடங்களை ஆய்வு செய்து நிறுவுவதற்கு, மற்றும் உங்கள் மின் அமைப்பில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் அதைச் சரிசெய்வதற்கு, உரிமம் பெற்ற மின் ஒப்பந்ததாரரையே எப்போதும் பயன்படுத்தவும். உரிமம் பெற்ற ஒப்பந்ததாரரைக் கண்டறிய மின் பாதுகாப்பு ஆணையத்தைத் (ESA) தொடர்பு கொள்ளவும்.
- ஒரு மின்சுற்றில் அதிகப்படியான சுமை கொடுப்பதைத் தவிர்க்கவும்; கூடுதல் பிளக் செருகும் முனைகள் அல்லது மின்சுற்றுகள் தேவையா என்பதைத் தீர்மானிக்க உரிமம் பெற்ற எலக்ட்ரீஷியனை அணுகவும்.
- பிளக் செருகுவதற்கான இடம் இல்லாத பகுதிகளுக்கு, நீட்டிப்பு ஒயர்கள் தற்காலிகமாக மின்சாரத்தை கொண்டு வருகின்றன. அவை நீண்ட கால பயன்பாட்டிற்காக அல்லது நிரந்தர ஒயரிங்-ற்கு  மாற்றாக வடிவமைக்கப்படவில்லை



- மின்சாரத் தாக்குதலிலிருந்து உங்களைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்; உங்கள் கேரேஜ் உட்பட அனைத்து வெளிப்புற பிளக் செருகும் இடங்களிலும் கிரவுண்ட் ஃபால்ட் சர்க்யூட் இன்டர்ரப்டர்களை (அதாவது தரைக்கு மின்சாரத்தை கொண்டு சென்று காக்கின்ற) (ஜிஎஃப்சிஐ) நிறுவவும்.
- மின்சாதனங்கள், கருவிகள் அல்லது உபகரணங்களில் தீப்பொறி ஏற்பட்டால், அதிக வெப்பமானால் அல்லது ஸ்தம்பித்தால், அவற்றை மின் இணைப்பில் இருந்து அகற்றி, ஒரு டீலர் அல்லது தகுதிவாய்ந்த உபகரண சேவை தொழில்நுட்ப வல்லுநரைக் கொண்டு பிழைநீக்கவும்.
- உரிமையாளரின் கையேட்டில் உள்ள வழிமுறைகளைப் படித்து பின்பற்றுவதன் மூலம் மின்சார வாகனங்களை சார்ஜ் செய்யவும்.



**பாதுகாப்பற்ற செயல்கள்:**

- காரேஜ்-க்குள் தீயில் இட்டு சமைப்பதை ஒருபோதும்  செய்ய வேண்டாம்.
- ப்ரோபேன் அல்லது இதர எரிபொருட்களால் எரியும் ஹீட்டர்கள், சாதனங்கள், ஜெனரேட்டர்களை ஒருபோதும் உபயோகிக்க வேண்டாம்.
- எந்த ஒரு வாகனம், எரிபொருள் நிரப்பிய எஞ்ஜின் அல்லது மோட்டாரை (புல்வெட்டும் எந்திரங்கள், பனி அகற்றும் எந்திரங்கள்) காரேஜ்-ற்குள் வைத்து ஓடவிட வேண்டாம்.
- வீட்டிற்குள்ளோ அல்லது காரேஜ்-ற்குள்ளோ ஒருபோதும் புகைக்க வேண்டாம்; புகை பிடிக்கக்கூடிய மற்றவர்களையும் வெளியில் சென்று புகைக்கச் சொல்லுங்கள்.
- தீயுடன் இருக்கும் சிகரெட் துண்டுகளை எளிதில் தீப்பற்றக்கூடிய பொருட்களின் (செடிகொடிகள், தொட்டியில் இருக்கும் செடிகள்) மீது வீச வேண்டாம்.
- உங்கள் வீட்டிலோ அல்லது காரேஜ்-லோ ப்ரோபேன் வாயுவை வைத்திருக்க வேண்டாம். கசியும் இந்த வாயுக்கள் தீப்பொறி (மின்சார சாதனங்கள்) காரணமாக வெடித்துவிடலாம்.




**நினைவிருக்கட்டும்: தீப்பிடிப்பதற்கான வாய்ப்பினைக் குறைப்பதற்கு, உங்கள் கேரேஜ்-ஐ சுத்தமாகவும் நேர்த்தியாகவும் வையுங்கள்.**